# வாழைமரம்

வாழையடி வாழையாக வளரக் கூடியவை வாழைமரம். வாழைமரத்தில் உள்ள அனைத்து பாகங்களும், பயன்படக்கூடியவை.



வாழைமரத்தின் பூ துவர்ப்புச் சுவை வாய்ந்தவை.
வாழைப்பூ அடுக்கடுக்கான பூங்கொத்துகளாக இருக்கின்றன.



வாழைப்பூ

வாழைமரத்தில் காய்க்கும் வாழைக்காய் சமைப்பதற்குப் பயன்படுகின்றன.



வாழைக்காய்

வாழைக்காய் பழமாக மாறியபின் இனிப்பு சுவையுடைய வாழைப்பழம்  கிடைக்கிறது. ஒவ்வொரு வாழைத் தாரிலும் 3 முதல் 20 அடுக்குகளில் 60 முதல் 200 பழங்கள் வரை உள்ளன.

வாழைப்பழத்  தார்கள்



வாழைத்தாரில் ஒவ்வொரு அடுக்கு பழங்களும் வாழைப்பழச் சீப்பு என அழைக்கப்படுகிறது.



வாழைப்பழச் சீப்பு

தமிழ்நாட்டில் வாழை இலையில் தான் விருந்து உண்பர். வாழைமரம் இந்தியா,பிரேசில் போன்ற மித வெப்ப நாடுகளில் பயிரிடப்படுகிறது.





# வாழைப்பழத்தின் வகைகள்:-

1. செவ்வாழை,
2. மலை வாழை,
3. ரசுதாளி வாழை,
4. பச்சை வாழை,
5. மொந்தன் வாழை,
6. நேந்திர வாழை,
7. கதலி வாழை,
8. கற்பூரவல்லி வாழை,
9. பூவன் வாழை,
10. பேயன் வாழை.









# வாழையின் பாகங்கள்















## வாழையின் பயன்கள்:-

வாழைக்காய், வாழைப்பூ மற்றும் வாழைத்தண்டினைக் கொண்டு உணவு பதார்த்தங்கள் செய்யப் பயன்படுகின்றன. வாழைப்பழம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் பிடித்த பழமாகும். திருமண இல்லங்களில் வீட்டின் முன் தோரணமாக வாழைமரத்தைக் கட்டுவர்.





